## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகநெகும கென்சல்ரன்சி அன்ட் புறஜெக்ட் மனேஜ்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்டகணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | எல்கேஎஸ் 01 இன் 96 ஆம் பந்திக்கு முரணாக 2022 இல் ஏற்பட்ட மீள்மதிப்பீட்டு மிகையான ரூபா 108,307,060 மீள்மதிப்பீட்டு மிகை ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக உரிமை மாற்றல்க்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றிலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | எல்கேஎஸ் 16 இன் 68 ஆம் பந்திக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 10,171,533 தொகையை கையளிக்கும் போது ஏற்பட்ட தேறிய நட்டம் விரிவான வருமானக்கூற்றில் பதிவிடுவதற்கு பதிலாக நடைமுறை சொத்தின் கீழ் பதிவிடப்பட்டிருந்தது. அதன் விளைவால் நடைமுறைச் சொத்துக்கள் செயற்பாடு நடவடிக்கைகளிலிருந்தான விளைவுகள் அதே தொகையில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கையளிக்கும் திகதியிலுள்ளவாறு புத்தகப் பெறுமதி ரூபா 10,771,533 கொண்ட சொத்தினை கம்பனி கையளித்திருந்தது. ஆகையால் இது இலாப அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காதது டன் அத்தகைய தொகை ஆர்டீஏ இடமிருந்து பெறவேண்டியுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான ரூபா 5,593,120 தொகையான மீள்மதிப்பிட்டு மிகை எல்கேஎஸ் 16 இன் 41 ஆம் பந்தியின் பிரகாரம் படிப்பு வருமானங்களின் கீழ் சீராக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் பிடிப்பு வருமானம் குறைக்கப்பட்டு மீள் மதிப்பீடு ஒதுக்கம் அதே தொகையால் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 இன் 5.5.15 ஆம் பந்தியின் நிதிக் கருவிகள் பிரகாரம், வியாபார வருமதிகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தம் ரூபா.22,682,613 தொகைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு (ஒரு வருடத்திற்கு மேலாக) காலக்கழிவினை செய்திருக்கவில்லை. மேலும் கம்பனி நியமத்தின் 5.5.16 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார வருமதிகளின் காலக்கழிவுகளுக்கான கணக்கீட்டு கொள்கையை தேர்ந்தெடுக்கவில்லை. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியை 2023 மார்ச் 28 இல் முடிவுறுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தால கம்பனியில் நிலைத்திருக்கும் தன்மை நிச்சயமற்றதாக இருந்த போதும், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் எல்கேஎஸ் 01 இன் 25 ஆம் பந்தியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | கம்பனியானது முடிவுறுத்தது செய்முறையிலிருப்பதானால் நாங்கள் இம்முறையில் கணக்கிட்டிருந்தோம் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | எல்கேஎஸ் 24 இன் 18 ஆம் பந்தியின் தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்களின் பிரகாரம் தொடர்புடைய கட்சியினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வெளிப்படுத்தல் தேவைகள் கம்பனியால் ” ர்த்தி செய்யப்படவில்லை. | தொடர்புடைய கட்சியினர் தொடர்பான வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய கட்சியினர் மற்றும் தொடர்புடைய கட்சியினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிக்காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆகஸட் இல் கம்பனியில் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் 2023 ஆகஸ்ட் இற்கு பின்னர் ஏற்பட்ட செலவீனங்கள் நிர்வாகச் செலவீனத்திற்கு கீழ் காட்டுவதற்கு பதிலாக கம்பனியின் விற்பனை கிரயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் கம்பனியின் மொத்தலாபம் ரூபா 4,707,081 தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | ஆதனம், பொறி மற்றும் சொத்துக்களானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கும் வரையிலும் முறையான ரீதியில் பராமரிக்க வேண்டியுள்ளது. ஆகையால் நாற்கள் இதனை கிரயத்திற்கு சேர்ந்திருந்தோம். | கணக்கீட்டு வழுக்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய தொகை | 24,307,200 | 4,086,661 | 20,220,539 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணக்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. | இலக்கங்கள் இணக்கஞ்செய்யப்பட வேண்டுமென்பதுடன் நிதிக்கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்த முன்னர் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய தொகை | 6,733,089 | 9,672,984 | 2,939,895 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணக்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. | இலக்கங்கள் இணக்கஞ்செய்யப்பட வேண்டுமென்பதுடன் நிதிக்கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்த முன்னர் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத ஆவணச்சான்றுகள்

| | விடயம் | தொகை ரூபா. | சான்றுகளின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பங்குலாபத்திற்கான ஏற்பாடுகள் | **28,351,291** | சபை தீர்மானம் மற்றும் வருடாந்த பொது கூட்ட தீர்மானங்கள் | பங்குலாபத்திற்கான ஏற்பாடாக இது மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும், இந்த தொகையை செலுத்துவதற்கு எந்தவித தீர்மானமும் | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 38(i) மற்றும் 7 ஆம் பிரிவுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏ[ீஎம் இல் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நாங்கள் இதனை நடைமுறைப் பொறுப்பாக முன் கொண்டு வந்தோம் | |
| (ஆ) | பிற்போட்ட வரி சொத்துக்கள் மற்றும் அறவிட வேண்டிய வருமான வரி | 3,535,422 (பிற்போடப்பட்ட வரி ) 14,840,147 (வருமான வரி) | உரிய வரி ஆவணங்கள் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிரூபிப்பதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 133 ஆம் பிரிவு | கம்பனியின் சபை பங்குதாரர்களுக்கான வருடாநதப் பொதுக் கூட்டத்தை கம்பனியின் ஐந்தொகையின் திகதிக்கு பின்னர் ஆறு மாதங்களுக்கு பிந்தாமலும் மற்றும் முன்னைய வருடாநதப் பொதுக் கூட்டத்திற்குப் பின்னர் பதினைந்து மாதங்களுக்குப் பிந்தாமலும் ஒவ்வொரு கலண்டர் வருடத்திற்கும் ஒரு முறை நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2019 இற்குப் பின்னர் எந்தவொரு பொதுக்கூட்டத்தையும் நடாத்தியிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | கம்பனியானது கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மீதான அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான கூட்டுறவு ஆளுகை மீதான வழிகாட்டிகளின் 2.2.2 (ஆ) ix ஆம் பந்தி | நிறுவனமானது செயற்பாட்டு நிர்வாக, நிதி நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளினை முறையாக தாபிக்கப்பட வேண்டும். எனினும் கம்பனியானது செயற்பாடு நிர்வாகம், நிதி நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளை முறையாக தெரிவிக்கவில்லை. | கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் அரச உடமையாக்கப்பட்ட அரச நிறுவனங்களிற்கான செயற்பாட்டு கையேடு<br>(i) பந்தி 6.6 | நிதிகூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். கம்பனியானது நிதிக்கூற்றுக்களுடன் அதனை சமர்ப்பித்திருக்கவில்லை. | கிடைக்கப் பெற்றிருக்கவில்லை | பொது முயற்சிகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பந்தி 6.9 | அரச உடமையாக்கப்பட்ட நிறுவகங்களின் இயக்குனர் சபையானது தேவையான நடவடிக்கை எடுத்து நட்டங்களை பதிவழிக்கலாம். கம்பனியானது தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 12,658,780 மற்றும் தொடர்புபட்ட தரப்பினருக்கு செலுத்தவெண்டிய ரூபா 13,809,996 தொகையினை பதிவழிப்பு செய்ததது. கம்பனியானது உரிய சபை அங்கீகாரத்தை மாத்திரம் சமர்ப்பித்திருந்தது. | கிடைக்கப் பெற்றிருக்கவில்லை | சரியான பதிவழிக்கப்பட்ட பெறுமதியை மீள்பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.சுற்றறிக்கை செய்முறை பின்பற்றாமல் பதிவழிப்பு அங்கீகரிக்கப்பட மாட்டாது. |
| (ஈ) | இலங்கை கணக்காய்வு நியமம் - இலக்கம் 580 பிரிவு 10 | முகாமைத்துவ பிரதிநிதித்துவம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகாமைத்துவ பிரதிநிதித்துவ கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.9,593,831 நட்டமொன்றாக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 12,430,657 தொகையாக காணப்பட்டது. இதனால் நிதி விளைவுகளில் ரூபா 2,836,826 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டைவிட நிதி வருமானம் 155.80 சதவீதத்தால் அதிகரித்தமையே முன்னேற்றத்திற்கான காரணமாகவிருந்தது.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2023 ரூபா. | 2022 ரூபா. | வேறுபாடு ரூபா. | வேறுபாட்டிற்கான சதவீதம் |
|---|---|---|---|---|
| வருமானம் | 69,763,450 | 191,417,308 | (121,653,858) | (63.55) |
| விற்பனைக்கிரயம் | 63,625,683 | 170,273,295 | (106,647,612) | (62.63) |
| நானாவித வருமானம் | 13,843,235 | 7,970,241 | 5,872,994 | 73.69 |

| | | | | |
|---|---|---|---|---|
| தனிப்பட்ட செலவுகள் | 20,395,949 | 21,750,360 | (1,354,411) | (6.62) |
| ஓய்"திய பணிக்கொடை | 848,530 | 2,894,350 | (2,045,820) | (70.68) |
| தாபன மற்றும் நிர்வாகம் | 25,659,652 | 14,660,832 | 10,998,820 | 75.02 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 27,972,208 | 21,288,546 | 6,683,662 | 31.39 |
| சம்பளம் மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் | 1,835,864 | 654,541 | 1,181,323 | 180.48 |
| நிதி வருமானம் | 75,653,056 | 29,575,557 | 46,077,499 | 155.8 |
| நிதிக் கிரயங்கள் | 72,752 | 1,751,644 | (1,678,892) | (95.84) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | **2023** | **2022** |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 5.7 | 2.13 |
| விரைவு விகிதம் | 5.69 | 2.08 |
| மொத்த இலாப விகிதம் | 8.79 | 11 |
| தேறிய இலாப விகிதம் | (13.75) | (6.5) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது 2004 ஆம் ஆண்டில் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக தாபிக்கபட்டு 2009 இல் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் மீள் பதியப்பட்டது. இந்த கம்பனியை தாபிப்பதற்கான பிரதான நோக்கங்களுக்காக சாத்தியவளக் கற்கைகள் மற்றும் நிர்மாணச் செயற்திட்டங்களிற்கான ஆலோசனை சேவைகளை வழங்கும் அதே நேரம் வீதி அபிவிருத்திக்கான நிர்மானம் மற்றும் மீள் நிர்மான துறைக்காக செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் இருந்தன அதனால் கம்பனியானது பணி கலவையை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காகவும் நிர்மாணத்திற்காகவும் மாத்திரம் செய்யப்படாது எனவும் கம்பனியின் முடிவுறுத்தல் வரையிலும் என அவதானிக்கப்பட்டது. | கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | அமைப்பின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிர்மாணத்துறையிலுள்ள நிதிப்பிரச்சனையால் போதிய வணிக சந்தர்ப்பங்கள் இன்மையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான மூன்று கம்பனிகளைமுடிவுறுத்துவதற்கும் மெஹா நெகும நிர்மான மற்றும் முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் அனைத்து 47 உத்தியோகத்தர் தன்னாரவ ஓய்ூதிய திட்டத்தை (வீஆர்எஸ்) பயன்படுத்தி ஓய்ூதியம் பெற்றிருந்தனர். எனினும், 2023 ஆகஸ்ட் 11 இன் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் முடிவுறுத்தலில் தானாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு உதவி செய்யும் முகமாக அவர்களில் சிலரை மீள ஈடுபடுத்துவதற்கு இயக்குனர் சபை தீர்மானித்திருந்ததுடன் கம்பனி ஒப்படை அடிப்படையில் 25 உத்தியோகத்தர்களை மீளஈடுபடுத்தியிருந்தது. அதற்கு மேலதிகமாக, கம்பனியின் முடிவுறுத்தல் செய்முறை 2023 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்காததுடன் மீள் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக 2023 செப்தெம்பர் இலிருந்து 2023 திசெம்பர் 31 வரையிலும் ரூபா. 7,792,993 செலுத்தப்பட்டதுடன் இது சிக்கனமற்ற செலவீனமாக இனங்காணப்பட்டது. மேலும், 25 உத்தியோகத்தர்களை மீள் அமர்த்துவதற்கான அனுமதி மற்றும் வேலைக்கமர்த்துவதற்கு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருடம் முடிவுறுத்தல் செய்முறை ஆரம்பிக்கப்பட்டதால் செயன்முறைக்கு உதவுவதற்கான ஆகக் குறைந்த உத்தியோகத்தர்களை பராமரிக்க வேண்டியுள்ளது.ஆகையால் முடிவுறுத்தாரர் நியமிக்கும் வரையிலும் இந்த உத்தியோகத்தரை பராமரித்து உத்தியோகத்தர்களை நிறுத்தி வைத்திருந்தோம். மேலும், நாங்கள் இந்த பதவியணியினை பராமரிக்க வேண்டியிருப்பதுடன் அதிகுறைந்த உத்தியோகத்தர்களை நிலைநிறுத்துவதில் அவரின் விருப்பத்தை பயன்படுத்துவதற்கு இயக்குனர் சபையால் தலைவருக்கு நம்பிக்கையளிக்கப்பட்டது. | சிக்கனமற்ற செலவீனத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |
| (இ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வீதி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டியவை ரூபா. 8,655,559 தொகையானதுடன் ரூபா. 5,406,007 தொகையான பிடிப்பு பணம் 05 வருடங்களிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது.அத்தகைய தொகைகளை அறவிடுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால நிலுவை மற்றும் குறுங்கால நிலுவைகளை சேகரிப்பதற்கு பல ஆண்டுகளிற்கு மேலாக பல தடவைகள் எடுக்கப்பட்டதுடன் அனைத்து மீதிகளும் அவ்வாறேயிருந்தது. | வருமதிகள் அதே நேரம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனியன் நடைமுறைக்கணக்கு மீதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா.87,200,188 ஆகவிருந்தது. கம்பனியானது இந்த நிதியங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆமைச்சரவைக்கு ஆர்டீஏ ஆல் சமர்ப்பிக்கப்பட்ட பிழையான தகவலை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தினை பெற்ற பின்னர் அனைத்து நடடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கு நாங்கள் கேட்கப்பட்டிருந்தோம்.இந்த விடயத்தை | இந்த நிதிகளை வினைத்திறனான முறையில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையாக கொண்டு இந்த தொகையை நிலையான வைப்பில் முதலிடுவதற்கு எந்தவித தீர்மானத்தையும் சபை தீர்மானித்திருக்கவில்லை. | |
| (உ) | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் பரீட்சிக்கும் போது பொடுப்பனவுகளிற்கு அனுமதியில்லாமை, செலவுகளை பரீட்சிக்கும் போது ஆவணங்களில்லாமை மற்றும் கம்பனியின் செலவுகள் தொடர்பிலான செயன்முறைகளை அமுல்படுத்தாமையால் ” ர்த்தியாக்கப்படாத பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்தமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | 2023 மார்ச் இல் வீஆர் எஸ் இனை முடிவுறுத்தல் செய்முறை ஆரம்பித்த போது நாங்கள் குறைந்த ஆளணியுடனிருந்நதுடன் தற்போதுள்ள ஆளணி அதிகூடியதாகவுள்ளது.இ தன் காரணத்தால் நாளாந்த வேலையில் பின்னடைவு ஏந்படுகிறது. | கொடுப்பனவுடன் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியானது சீஎஸ்எஸ் எமுல்சன் வழங்குனர்களுக்கு 6 சந்தர்ப்பங்களில் ரூபா. 8,225,250 இனை 2023 இல் பொருட்களை பெற முன்னர் செலுத்தியிருந்தது. | நிதிப்பிரச்சனையால் இறக்குமதிகளில் பல அந்தக்காலப்பகுதிக்காக நிறுத்தப்பட்டது. ஆகையால் அந்த காலப்பகுதியில் எமில்சன் இறக்குமதி செய்யப்பட்டிருக்காததுடன் உள்நாட்டு இருப்புக்கான அதிக கேள்வி அதே காலப்பகுதிக்காகவிருந்ததுடன் வழங்குனர்கள் அவர்களுக்கிடையே இருப்பை கடன் அடிப்படையில் வழங்காததுடன் நாளாந்தம் விலைகள் அதிகரித்தது. அகையால் நாங்கள் உற்பத்தி செய்முறையை நிறுத்தாமல் உரிய நேரத்தில் வாடிக்கையாளர் கோரிக்கைகளை வழங்குவதற்காக பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதுடன் அதிக இலாபத்தை ஈட்டுகின்றது. அந்தக்காலப்பகுதியின் போது அனைத்துப்பொருட்களும் கிடைக்கப்பெற்றது. | கொடுப்பனவு செய்முறைகள் செயன்முறைப்படுத்தப்படாது வழியில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 ஏனைய நிறுவனங்களின் வளங்களினை பயன்படுத்துதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனியின் தலைமை அலுவலகமுள்ள, மெதயாய மற்றும் மாகோ பொறிகள் இடங்களிற்கான வாடகை கட்டணத்தை கம்பனி செலுத்தியிருந்த போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் குத்தகை உடன்படிக்கையோ வாடகை உடன்படிக்கையோ கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் ஆர்டீஏ உடன் உடன்படிக்கையொன்றில் ஈடுபடுவதற்கு எண்ணற்ற நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. நாங்கள் அடிக்கடி அவர்களை கேட்டுக்கொண்டுள்ளோம். | வாடகை சொத்துக்கள் தொடர்பில் ஆர்டீஏ உடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |